பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 23 (9—10—71) சனி வெளியூர்: புரட்டாசி 24 (10—10—71) ஞாயிறு [இதழ்: 97

தமிழ்நாட்டில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

நவ. 1 முதல் பெரும் அளவில் செயல்படுத்தப்படும்

திருச்சி, அக். 9—

அடுத்த திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாட்டில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பல பெரும் அளவில் செயல்படுத்தப்படும்.

அனைத்து நாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன் இந்தப் பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடலூராரர் பெயரில் பேருந்து நிலையம்

ஏழுகிணறு பகுதியும் வள்ளலார் நகர் ஆகும்

இராமலிங்கர் பிறந்த நாள் விழாவில் கலைஞர் கருணாநிதி அறிவிப்பு

பெரியவர்களுக்கு விழா எடுப்பதுடன் நில்லாமல் அவர்தம் கருத்துக்களையும் வாழ வைக்க வேண்டுகோள்

சென்னை, அக். 9—

"தமிழகச் சட்டமன்ற மேலவையின் முன்னாள் தலைவர் எம். மாணிக்கவேலர் அவர்கள் எனக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார்; அந்தக் கடிதத்தில், 'வள்ளலார் நகர்' என்று ஏழுகிணறு பகுதிக்குப் பெயர் வைக்க வேண்டுமென்றும், தங்கசாலை பஸ் நிலையத்திற்கு, 'வள்ளலார் பேருந்து நிலையம்' என்று பெயர் வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது; இங்கேயும் அதையே துண்டறிக்கையாக வெளியிட்டு — அந்தக் கோரிக்கையை என்னிடம் தந்திருக்கிறார்கள்; 20 காசு அஞ்சல் தலை ஒட்டி இதை முதலமைச்சருக்கு அனுப்புங்கள்' என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இதெல்லாம் வீணான செலவு; 'வீணான செலவு' என்பதற்கு இரண்டு பொருள்களைக் கொள்ளலாம் — 'எவ்வளவுதான் செலவு செய்தாலும் 'காரியம் நடக்காது' என்றும் கொள்ளலாம்; இவ்வளவு சிரமப்படாமல், 'என்னை அழைத்து ஒரு வார்த்தைச் சொன்னாலே போதுமே' என்றும் கொள்ளலாம்.

"காலையிலேயே இதைப்பற்றி அறிவிக்கலாம் என்று கருதியிருந்தேன்; இங்கே வந்தபிறகு சந்தனப் பெட்டியில் வைத்து கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள்.

"மாநகராட்சி மூலம், ஏழுகிணறு பகுதிக்கு 'வள்ளலார் நகர்' என்று பெயர் வைக்க ஆவன செய்யப்படும் — என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்; பேருந்து நிலையத்திற்கும் பெயர் மாற்றப்படும்.

"தமிழ்ப் பெயர்களை — தமிழ்ச் சான்றோர்களின் பெயர்களை வைப்பதில் இந்த அரசுக்கு நிகர் வேறில்லை; ஆனால், 'இப்படிப் பெயர் வைப்பதைத் தவிர இந்த அரசுக்கு வேறு என்ன வேலை' என்று எங்களைப் பார்த்துக் கேட்பதிலிருந்து, 'எங்களைக் காப்பாற்ற நீங்கள் உறுதுணைபுரிய வேண்டும்' என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்."

என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், நேற்று சென்னை இராஜேசுவரி மண்டபத்தில் இராமலிங்கம் பணி மன்றச் சார்பில் நடைபெற்ற காந்தியண்ணல்—இராமலிங்க அடிகள் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் அறிவித்தார்.

புலவர் முருகையாவின் அருட்பா இசைக்குப் பின், அறப்பணி மன்றத் தலைவர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு—இராமலிங்க அடிகள் வரலாறு — காந்தியடிகள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

விழாவுக்குத் தலைமையேற்ற கலைஞர் கருணாநிதி அவர்கள், நூலாசிரியர்களான வன்மீகநாதன், ஊரன் அடிகள், எஸ். டி. சுந்தரம் ஆகியோருக்குச் சால்வை போர்த்திப் பாராட்டினார்.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பெரியசாமி தூரன், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர், மேற் சொன்ன நூல்களைப் பற்றி திறனாய்வுரையாற்றினர்.

கலைஞர் அவர்கள் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"பெரியவர்கள் மறைவதில்லை— அவர்கள் என்றும் வாழ்கிறார்கள்! கருத்துக்கள் வாழ்கின்ற வரையில் அவர்கள் வாழ்கிறார்கள்!

அந்த அடிப்படையில், வள்ளுவரும் — காந்தியடிகளும் — வள்ளலாரும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடி போக' எனப் பாடினார் வள்ளலார்; அதில் எவ்வளவு பகுத்தறிவுக் கருத்துக்கள் — ஆழ்ந்த சிந்தனைகள் இருக்கின்றன என்பதை மறக்க முடியாது.

பிச்சைக்காரர்களைப் பற்றி இன்று நாம் சிந்திக்கிறோம் என்றாலும், வள்ளுவர், 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்று எழுதினார்.

வள்ளலாரோ, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார்.

இரப்போரை — இல்லாதாரை — வறியோரைக் கண்டபோதெல்லாம் அவர்களது பசியைப் போக்க வேண்டும்' என்று துணிந்து சொல்லி—பசி போக்க முயற்சி எடுத்துக்கொண்டார்.

திருவள்ளுவர் வாக்கின்படி வள்ளலார் வாழ்ந்து, முயற்சிகளை மேற்கொண்டார்! இன்று அவர் வழி நின்று தமிழக அரசு அந்த எண்ணங்களை நிறைவேற்றி வருகிறது!

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று விவசாயக் குடிமகனோ—குடியானவனோ—நிலக்கிழாரோ பயிரைப் பார்த்துச் சொல்லவில்லை!

'வாடிய பயிர்' என்று வள்ளலார் பாடியது, உயிர்களைத்தான் — 'பிச்சைக்காரர்களைத்தான் சொன்னார்; அதைச் செயலாக்கும் கட்டத்தில்தான் நாங்கள் இருக்கிறோம்!

இந்த விழாவுக்கு வருமுன், இராஜாஜி மண்டபத்தில், பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு நிதியைப் பெற்றுக் கொண்டுதான் இங்கே வந்திருக்கிறேன்.

செயலை முந்திச் செய்துவிட்டுச் சொல்லைப் பிந்திவைத்துக் கொள்ளும் விதத்தில், இராமலிங்கரின் கருத்துக்களைப் பின்பற்றி வருகிறோம்! அதற்கு உங்களது ஒத்துழைப்புத் தேவை!

புலால் உண்ணாமை என்பது, 'மகாத்மா காந்தியடிகளால்தான் முடியும்' என்று சொல்லிவிட்டு நாம் தப்பித்துக்கொள்கிறோம்.

விழாவுக்குரியவர்களுக்குச் சிறப்புத் தந்துவிட்டு — அவர்கள் சொன்ன கருத்துக்களைச் செய்யாமல் தப்பித்துக்கொள்ளும் நிலை இருக்கக்கூடாது!

கருத்துக்களுக்கு மதிப்பு இல்லாமல் ஆட்களுக்குப் பெருமையை அதிகப்படுத்தி — அவர்களின் கருத்துக்களைக் கொன்றுகொண்டே இருக்கிறோம்; அந்நிலை கூடாது; அவர்களுடைய கருத்துக்களை வாழவைக்க வேண்டும்.

இப்படிச் சொல்வது, 'இராமலிங்க அடிகளாரின் பெருமையை — புகழை — கீர்த்தியை மறக்க வேண்டும்' என்று விரும்புகிறவன் என்பதாகாது."

இரயில்வே போர்டில் கருத்துவேற்றுமை

தலைவர் பதவியிலிருந்து கங்குலி விலக்கப்படுவார்?

'வெறும் நிர்வாகப் பிரச்சினையே' என்கிறார் அமைச்சர் அனுமந்தையா

புதுடில்லி, அக். 9—

இரயில்வே போர்டு தலைவர்கள் குங்குலி — இரயில்வே அமைச்சர் அனுமந்தையா மற்றும் போர்டின் ஏனைய உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு இப்போது ஒரு நெருக்கடியான கட்டத்தை அதைந்திருக்கிறது.

இன்னும் மூன்று மாதம் கழித்துப் பதவி விலக இருக்கும் தம்மை வெளியேற்ற ஒரு 'புரட்சி' நடைபெற்றுவருவதாக போர்டு தலைவர் கங்குலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நான்கு நாட்களுக்குமுன் கங்குலி, தமக்குத் தொடர்ந்தாற்போல் 3 நாட்களுக்கு அரை நாள் விடுமுறை தேவையென்று கேட்டதாகவும், ஆனால் இரயில்வே அமைச்சர் அனுமந்தையா அவரது கோரிக்கையை நிராகரித்து 3 முழு நாட்கள் விடுமுறைக்கு அனுமதித்ததாகவும், அந்த மூன்று நாட்களுக்கும் அவரது பொறுப்பைக் கவனிக்க அடுத்து தலைவராக வரவிருக்கும் பாலிகா என்பவரை நியமித்ததாகவும் கூறப்படுகிறது. இது, கங்குலி பதவி நீக்கப்பட்டுவிட்டதாகவும், அவருக்குப் பதிலாகப் பாலிகா நியமிக்கப்பட்டதாகவும் பத்திரிகைகளில் செய்தியாக வெளியாயிற்று; ஆயினும், இச்செய்தியை அதிகாரி ஒருவர் மறுத்து, 'பாலிகாவின் நியமனம் தற்காலிகமானதே' என்று விளக்கம் அளித்தார்.

திரு. கங்குலி விடுமுறையில் இருக்கும்போது, அவரது அதிகாரத்தின்கீழ் இருந்த பல துறைகளும் மாற்றப்பட்டதானது, அவரை மேலும் வேதனையடையச் செய்திருக்கிறதாம்; முக்கியத்துவமில்லாத ஒருதுறை மட்டும் அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது; எல்லா மாற்றங்களும் செய்வதற்குத் தாமே அதிகாரம் படைத்திருக்கும்போது இச்செயல் நடைபெற்றிருப்பதைக் கங்குலி கடுமையானதாகக் கருதுகிறார்; ஆனால் அவரது கருத்தை மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

நேற்று இரயில்வே போர்டின் கூட்டம் ஒன்று நடைபெற்றது; 'இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு எனக்குத்தான் அதிகாரம் இருக்கிறது' எனக் கூறி, இக்கூட்டத்தில் கங்குலி கலந்துகொள்ளவில்லை; ஆயினும், மற்ற உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தியிருக்கின்றனர்.

"ஊழலை ஒழித்து நிர்வாகத்தைச் சீர்படுத்துவதில் நான் தீவிரமாக ஈடுபட்டதுதான் எனக்கு எதிர்ப்பு ஏற்படக் காரணம்" என்று கங்குலி தெரிவித்தார்.

எந்த ஊழல் ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதானாலும் சிறிய 'மீன்'களே அகப்படுவதாகவும், பெரியவைகளைப் பிடிக்க முற்பட்டால் இப்படிப்பட்ட சிக்கல்கள் [illegible] ஏற்படுவதாகவும் கங்குலி குற்றஞ்சாட்டினார்.

நேற்று கங்குலி தமது அலுவலகத்துக்குச் செல்லவில்லை; 'என்னுடைய அலுவலக அறை எனக்கு ஒதுக்கப்பட்டிருக்குமா என்பதே நிச்சயமில்லாததால் தான் அலுவலகத்துக்குச் செல்லவில்லை' என்றார் அவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டனுக்குப் பதிலடி கொடுக்கிறது இரஷ்யா

தூதரக ஊழியர்களை வெளியேற்ற உத்தரவு

மாஸ்கோ, அக். 9—

சில நாட்களுக்குமுன் பிரிட்டன், பல இரஷ்யத் தூதரக ஊழியர்களை நாட்டைவிட்டு வெளியேற உத்தரவிட்டதற்குப் பதிலடியாக இரஷ்யாவும், பல பிரிட்டிஷ் தூதரக ஊழியர்களை இரண்டு வாரத்திற்குள் இரஷ்யாவிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கிறது.

மேலும், விடுமுறையில் வெளிநாடு சென்றிருக்கும் பிரிட்டிஷ் இராசதந்திரிகள், இரஷ்யாவில் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் — என்றும் இரஷ்யா அறிவித்தது.

இரஷ்யாவில் இந்தப் பிரிட்டிஷார் தங்கள் தகுதிக்கு மீறின செயல்களில் ஈடுபட்டதாகக் காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

இச்செய்தியை அறிவித்த மாஸ்கோ டெலிவிஷன் நிலையம், இனிமேல் நடைபெறவிருக்கும் இருநாட்டு அமைச்சர்களின் சுற்றுப்பயணங்களும் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவித்தது.

பிரிட்டிஷ் அமைச்சர் ஹோம், இரஷ்யாவுக்கும்—இரஷ்ய அமைச்சர் பிரிட்டனுக்கும் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. இதனால் ரத்து ஆகிறது.

பசுமைப் புரட்சியில் தமிழகம்--விரைந்து முன்னேறி வருகிறது

மீன் வளத்தைப் பெருக்கப் பல்வேறு திட்டங்கள்

அமைச்சர் சத்தியவாணிமுத்து வெளியிடும் தகவல்கள்

சென்னை, அக். 8—

"தமிழகத்தில் மிக வேகமாகப் பசுமைப் புரட்சி ஏற்பட்டு வருகிறது" என்று மீன் வளத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் கூறினர்.

இங்கு மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், அமைச்சர், கடல் -- மற்றும் உள்நாட்டு நீர் நிலைகளைப் பயன்படுத்தி மீன் வளத்தைப் பெருக்க அரசு எடுத்து வரும் பல நடவடிக்கைகளை விளக்கினர்.

இக்கூட்டத்தில், மாநில -- மத்திய மீன் துறை அதிகாரிகளுடன் ஏனைய மாநிலங்களிலிருந்து அழைக்கப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"புலிக்காடு ஏரி, ஒரு முக்கிய இருல் உற்பத்தி நிலையமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

"நல்ல நீரில் இருல்களை வளர்ப்பது குறித்து பெரிய அளவில் பவானி சாகரில் ஆராய்ச்சி நடைபெற்றுவருகிறது சென்னை அடையாற்றிலும், இருல் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

"இதுவரை வெறும் கருவாட்டையே ஏற்றுமதி செய்துவந்த நாம், இப்போது இருல்களையும், நண்டு வகைகளையும் ஏற்றுமதி செய்ய முற்பட்டிருப்பதால், புதிய ஆராய்ச்சிகள் முக்கியமானதாகும்.

"இயந்திரப் படகுகளையும் -- நவீன வலைகளையும் இப்போது மீனவர்கள் தாராளமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். புதிய மீன்பிடி முறைகளும் இப்போது புகுத்தப்பட்டு வருகிறது

"கரையோர மீன்வள ஆய்வு நடத்த விரைவிலேயே நான்கு மீன்பிடிக் கப்பல்களை வரவழைக்கவிருக்கிறோம்.

"இப்போது 12 மைல் தூரமாக இருக்கும் கடல் உரிமைப் பகுதியை மேலும் நீடிக்க வேண்டும்.

"பெரு நாடு, 200 மைல் தூரத்துக்கு கடல் உரிமை கொண்டாடி வருகிறது.

"மீனைப் பதப்படுத்தி டின்களில் அடைக்கும் முறையிலும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகிறன: இதற்காகக் கடற்பாசியைப் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

"இந்திய வேளாண்மைக் கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட பயன்படாத மீனைப் பயன்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றுக்குத் தமிழக அரசு அனுமதியளித்திருக்கிறது.

"தூத்துக்குடியில் முத்துச் சிப்பி ஆராய்ச்சியும் நடைபெற்றுவருகிறது; மத்திய கடல் மீன் துறையுடன் ஒருங்கிணைந்து இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கும் யோசனை கூறப்பட்டிருக்கிறது."

நிழ்ச்சிக்கு மீன்வளத் துறை இயக்குநர் தாயாப் தலைமைவகித்தார். துணை இயக்குநர் சூடாமணி நன்றி கூறினர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாகின்றன

எங்கும் இராணுவம்--- அனுமதியின்றி எவரும் நுழைய முடியாது

ஈரானில் நடைபெறும் விழாவையொட்டி ஏற்பாடு

டெஹ்ரான், அக் 8—

பெர்சியா (ஈரான) ஆட்சி நிறுவப்பட்டு 2 500-வது ஆண்டு நிறைவுறுவதைக் கொண்டாடும் வகையில் ஈரானில் நடைபெறவிருக்கும் விழாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இவ்விழாவிற்கு வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் பெரும் அளவில் வருகைதர இருக்கிருர்கள்; இந்நிகழ்ச்சியைக் குலைப்பதற்காகக் கொரில்லாக்கள் திட்டமிட்டுவருகிருர்கள் என அஞ்சியே பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டுப் பத்திரிகைப் படம் பிடிப்பாளர்கள் எவரும் அடுத்த அறிவிப்பு வரையில் படம் எடுக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகையாளருக்கான தனி அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவது தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது; போலிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக வந்த வதந்தியே இத்தாமதத்திற்குக் காரணமாகும்.

எல்லா பொதுக் கட்டட வாயில்களிலும் ஆயுதந்தரித்த இராணுவத்தினர் காவல் நிற்கின்றனர்; சோதனை செய்யப்பட்ட பிறகே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

விழா மண்டபத்தைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்; தனி அனுமதியின்றி யாரும் உள்ளே நுழைய முடியாது.

தாமல் ஏரி

தூர் வார ஏற்பாடு

காஞ்சிபுரம், அக். 8—

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்ருன தாமல் ஏரியில், தூர் வரும் பணி விரையில் மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ. 1,32,000 செலவு பிடிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகவலை, தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ்.ஜே சாதிக்பாட்சா இங்கு தெரிவித்தார்.

மொத்தம் 14,000 ஹெக்டேர் ஆயக்கட்டுப் பகுதியைக் கொண்டுள்ள இந்த ஏரி, இப்போது முழுதும் வற்றிக் கிடக்கிறது.

கூட்டுறவுத்துறை 'அட்டை'கள்

ஒழிக்கச் சட்டம்--- புதுவை முதல்வர் அறிவிப்பு

புதுவை, அக். 9—

"கூட்டுறவுச் சங்கங்களில் யாரும் முக்கியப் பதவிகளில் விடாமல் ஒட்டிக்கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தைத் திருத்த மசோதா கொண்டுவர எண்ணியிருக்கிறோம்"

என்று புதுவை முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக், உருவையாறு நகர விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கத்துக்கு ரூ. 15,000 செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

விழாவிற்குக் கல்வி அமைச்சர் எஸ். ஆறுமுகம் தலைமை வகித்தார்; 'உருவையாறு கிராமம், 'மாதிரிக் கிராம'மாக மேம்பாடு செய்யப்படும்' என்ருர் அவர்.

வளர்ச்சித் துறைச் செயலாளர் எல். என். எஸ். முகுந்தன் கூட்டுறவுச் சங்கக் கொடியை ஏற்றி வைத்தார்.

சங்கத்தின் தலைவர் எம். பழனிவேந்தன் வரவேற்றுப் பேசினர்.

முன்னள் மேயர் ஆர். வீரப்ப முதலியார் நன்றி கூறினர்.

கைத்தறித் தொழிலில் புதிய முயற்சி

ஆலைத் துணிகளும் போட்டியிடும் வகையில் 'கிளாசிக்' சட்டைகள்

அயல்நாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்கு நல்ல கிராக்கி

புதிய ரகம் வெளியீட்டு விழாவில் அமைச்சர்கள் செ. மாதவன் -- சி. பா. ஆதித்தனர் விளக்கம்

சென்னை, அக். 9—

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 'கிளாசிக்' என்ற ரெடி மேடு சட்டையை முதன்முதலாக அறிமுகப்படுத்தும் விழா, கலைவாணர் அரங்கில்-- தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். மாதவன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் சட்டையை வெளியிட்டார்.

திரு. மாதவன் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"கைத்தறித் துணிக்கு புதிய மார்க்கெட் தேடுவதற்கு இந்த 'கிளாசிக்' சட்டை புதிய முயற்சியாகும்; இந்த முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கிறது.

கைத்தறித் துணி உலகச் சந்தையில் போட்டியிடும் அளவுக்குப் புதிய புதிய ரகங்களை உருவாக்க மாவட்டந்தோறும் 12 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன; இவற்றுக்காக ரூ 4 இலட்சம் செலவிடப்படுகிறது.

புதிய ரகங்களை உற்பத்தி செய்வதில் தமிழகத்தில் வட பகுதியில் கோவை, சேலம் போன்ற ஊர்களில் உள்ள நெசவாளர் ஆர்வத்துடன் முன்வருகிருர்கள்; தென் பகுதியான இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளவர்கள் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை.

கைத்தறித் துணிகள் அதிக அளவில் விற்பனையாவதற்கு அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ. 458 இலட்சம கழிவுத் தொகையாக வழங்கியுள்ளது; இதன் விளைவாக, கைத்தறி விற்பனை உயர்ந்துள்ளது; இன்னும் அதிகம் விற்பனையாக வண உதவி செய்வதற்கு அரசு தயங்காது.

நம் நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிக்கு வெளிநாடுகளில் கிராக்கி இருப்பதை நான் அண்மையில் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்தபோது அறிந்துகொண்டேன்; அவர்களுக்கு ஏற்ற ரகத்தைக் கொடுக்க வேண்டும்: கொடுப்பதாக ஒப்புக்கொண்ட ரகங்களையே அனுப்ப வேண்டும்; கொடுப்பதாக ஒப்புக்கொண்ட சரக்கு வேருகவும் --- அனுப்புகின்ற சரக்கு வேருகவும் இருக்கின்ற சூழ்நிலை மாறினல், பெரும் அளவில் ஏற்றுமதியாவதற்கு வாய்ப்பு இருக்கிறது."

'கிளாசிக்' சட்டையை வெளியீட்டுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் பேசுகையில் கூறியதாவது:—

"'கிளாசிக்' என்ற நல்ல பெயர் காரணமாக இந்தச் சட்டைப் பெரும் அளவில் விற்பனையாவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

கைத்தறித் துணிக்கும் -- ஆலைத் துணிக்கும் வேற்றுமை இல்லாத வகையில் கைத்தறித் துணி தற்போது தயாரிக்கப்படுகிறது.

இதற்கு நல்ல கிராக்கி ஏற்படும் என்று நம்புகிறேன்.

கைத்தறித் தொழிலில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணியில் இருக்கிறது; இதற்குக் காரணம், நெசவாளர்களின் கைத்திறன்தான்.

மாறிவரும் 'மோஸ்தர்'களுக்கு ஏற்பக் கைத்தறித் துணிகளின் ரகங்களும் விரைவாக மாற வேண்டும்."

கைத்தறித் துறை இயக்குநர் திரு. கே. எஸ். இராமகிருட்டினன் துவக்கத்தில் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், கைத்தறியில் டெரிலின் தயாரிக்க முடியும் என்று ஆராய்ச்சியின்மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் டெரிலின் துணி கைத்தறியில் தயாரிக்கப்படும் என்றும் கூறினர்.

திரு. ஈ. ஆர். கிருட்டினன் எம்.பி. பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்ற ஆண்டு ரூ. 4 கோடியாக இருந்த கைத்தறி விற்பனை இந்த ஆண்டு ரூ 8 கோடியாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தற்போது இலாபத்தில் நடைபெறுகிறது; அதில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இந்த ஆண்டு 20-முதல் 25-சதவிகிதம் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது."

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அமைச்சர் திரு. செ மாதவனிடம் திரு. பெருமாள் ரூ. 1,001 வழங்கினர்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தனி அதிகாரி திரு. ஆர். கிருபாகரன் நன்றி கூறினர்.

கொச்சி, அக். 8—

கடந்த ஐந்து மாதங்களில் இந்தியாவிலிருநது 14,802 டன் மீன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

இதன் மொத்த மதிப்பு ரூ. 14.44 கோடியாகும்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் மூன்றரை சதவிகிதம் மீன் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது.

தொழில் துறையில் தமிழகத்தின் முன்னேற்றம்

ஆளுநர் கே. கே. ஷா பாராட்டு

கோவை; அக். 9--

"தமிழ்நாடு, தொழில் துறையில் சிறப்பான முன்னேற்றமடைந்திருக்கிறது; 'பசுமைப் புரட்சி'த் திட்டமும் சீராக வளர்ந்துவருகிறது."

இவ்வாறு, ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், பவானிசாகரில் நிருபர்களிடம் பேசுகையில் பெருமிதமுடன் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"பல பயிர் சாகுபடித் திட்டங்கள் மூலம், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்பாடு செய்வது அவசியமாகும்.

துணித் தொழிலில் உற்பத்தியைப் பெருக்கவும் -- தரத்தை உயர்த்தவும் -- உலக நாடுகளுடன் போட்டி போடக்கூடிய உயர் நிலையை உண்டாக்கவும் அத்தொழிலை நவீனப்படுத்த வேண்டியது அவசியமாகும்."

ஆளுநரின் கருணை உள்ளம்

கோவை, அக். 9—

தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் காட்டிய பெருந்தன்மையின் பலனைத் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஜெகநாதன் என்பவர், பெருந்துறை க்ஷயநோய் மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறர்.

முன்னள் இராணுவ வீரரின் மகனை அவருக்கு வயது 17 ஆகும்.

ஜெகநாதனின் தந்தை ஆளுநரிடம் கொடுத்த மனுவில், 'நான் ஒரு ஏழை; என் மகனுக்கு ஓராண்டுக்குமேலாக எலும்புருக்கி நோய் இருந்துவருகிறது; எங்களுடைய வறுமையின் காரணமாக மருத்துவமனையில் அவனைச் சேர்க்க முடியவில்லை' என்று கூறியிருந்தார்.

ஆளுநர் ஷா பெருந்துறை மருத்துவமனைக்கு வந்திருந்தபோது, ரூ. 1,001 நன்கொடை அளித்தார்; 'அத்தொகை, அந்த இளைஞரின் சிகிச்சைக்கும் பயன்படுத்தப்படும்; இளைஞனை மருத்துவமனையில் சேர்த்துக்கொள்ளும்படி மருத்துவமனை அதிகாரிகளிடம் சொல்லப்பட்டுவிட்டது' என்று கோவை கலெக்டர் எக். பி. என். ஷெட்டி கூறினர்; அவரே மருத்துவமனைக் குழுவின் தலைவருமாவார்.

புட்டிகளில் பதனம் செய்யப்பட்ட கள்

புதுவையில் முதன் முதலாக விற்பனைக்கு வரும்

சென்னை, அக். 9—

பதனம் செய்யப்பட்ட (பாஸ்சுரைஸ்ட்) கள்ளுப் புட்டிகள் இந்தியாவிலேயே முதல் தடவையாக விரைவில் புதுச்சேரியில் கிடைக்கும்.

நவீன மதுபானக் கடைகளில் ஒயின்--விஸ்கி போன்ற நாசுக்கான மதுபானங்களுக்குச் சரிநிகர் சமானமாக இனி கள்ளும் காட்சியளிக்கும்.

கள்ளைப் பதனப்படுத்தி புட்டிகளில் அடைப்பதற்காக, ரூ. 4 இலட்சம் செலவில் -- தனியார் துறையில் -- கள் பதனத் தொழிற்சாலை ஒன்று புதுவையில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

நவம்பர் இறுதிக்குள் இது செயல்படத் தொடங்கிவிடும்; ஒரு நாளைக்கு 5,000 புட்டிகள்வீதம் இதில் பதனம் செய்யப்படும்.

சாதாரணமாக கள்ளைக் கெடாமல் ஒரு நாளைக்குத்தான் வைத்திருக்க முடியும்; பதனப்படுத்துவதன் மூலம் ஓராண்டுக்கு மேலும் அதைக் கெடாமல் வைத்திருக்க முடியும்.

இலங்கையிலும், மலாசியாவிலும் புட்டிக் கள் பிரபலமடைந்திருக்கிறது; கொழும்பில் மட்டும் நாள்தோறும் 80,000 புட்டிகள் விற்பனையாகின்றனவாம்.

நாகை வட்ட தி. வி. தொ. மு. சங்கம்

4—9—71 அன்று கீழ்வேளூர் இராசா திரைப்பட அரங்கில் நாகை வட்ட தி.வி.தொ.மு சங்கப் பிரதிநிதிகள் -- கழகச் செயலாளர்கள் கூட்டம், திரு. இரா. கல்யாணசுந்தரன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, ஜி. பி. சோமசுந்தரம், உடுமலை நாராயணன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, சேலம் செல்லம், கணபதி ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

கலைஞர் அவர்களுக்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்துக் கவுரவித்தது குறித்து மகிழ்ச்சியும் பாராட்டுதலும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால், மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து மகிழ்ச்சியும் பாராட்டுதலும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது; மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரயில்வே நிர்வாகத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

இ. தொ. மு. சங்கப் பொதுக்குழு முடிவு

திருச்சி, அக். 2—

செப். 29, 30 ஆகிய நாட்களில், திருச்சிராப்பள்ளி தில்லைநகர் மக்கள் மன்றத்தில், திரு. தா. கிருட்டினன் எம்.பி. தலைமையில் இரயில்வே தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது; தென்னக இரயில்வேயின் பல பகுதிகளிலிருந்துப் ஏறத்தாழ 500 தொழிலாளர் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

தலைவர் தா. கிருட்டினன், பொதுச்செயலாளர் செ. குப்புசாமி, பொருளாளர் மு. தங்கவேலு, மற்றும் தலைமைச் சங்கப் பொறுப்பாளர்களும், மற்ற டிவிஷன் கிளைப் பொறுப்பாளர்களும் விரிவுரையாற்றினர்.

இரயில்வேத் தொழிலாளர்களின் குறைகளும் கோரிக்கைகளும் விவாதிக்கப்பட்டு, இரயில்வேத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு இரயில்வே நிர்வாகத்தை வற்புறுத்திப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

குறிப்பாக, 3-வது சம்பளக் குழுவின் பரிந்துரைகள் 1971-ம ஆண்டு இறுதிக்குள் முடிவு செய்யப்பட்டு வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கையின் பேரில் இந்தியப் பேரரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதற்காக, நவம்பர் முதல் நாளில் கூட்டமும் -- ஆர்ப்பாட்டமும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி, திருவரங்கம் ஆகிய இரு நகரங்களுடன் பொன்மலை—பொன்மலைப்பட்டி—கற்கண்டார் கோட்டை—திருவெறும்பூர் ஆகிய பகுதிகளையும் இணைத்து, திருச்சிராப்பள்ளி நகரை, 'B-1' Class நகரமாக உயர்நிலைப்படுத்தப்பட வேண்டுமென்று இந்தியப் பேரரசை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டும், தமிழக அரசு பரிந்துரைத்து அதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

பொன்மலை இரயில்வேத் தொழிற் பேட்டையில் பாக்ஸ் வேகன் செய்யப்பட்டுவரும் பெரிய தொழிற் பகுதியைச் சிறிது சிறிதாகக் குறைத்து மூடிவிட இருக்கும் அநீதியான செயலைக் கண்டித்தும், இந்நிலைமை ஏற்பட்டால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

மற்றும் இரயில்வேத் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நான்காம்நிலை ஊழியர்களுக்கு முறையாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு உரிய காலத்தில் கிடைப்பதற்கு இடையே உள்ள காலந்தாழ்த்தும் அநீதியும், மற்றவைகளும் கைவிடப்பட்டு அவர்களுக்கு இரயில்வே நிர்வாகம் நியாயம் வழங்கக் கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'நகரில் குடிசைப் பகுதிகள் உருவாவதைத் தடுப்போம்'

'சின்னஞ்சிறு கிராமமானலும் வசதிகளைப் பெருக்குவோம்'

கழக ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் திட்டம்-- கலைஞர் கருணநிதி விளக்கவுரை

சென்னை, அக். 8–

சென்னை -- சேத்துப்பட்டு மீனம்பாள் சிவராஜ் நகரில்--குடிசை மாற்று வாரியத்தினரால் -- குடிசைப் பகுதி மாற்றும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இந்த இடத்தில், ரூ. 18 இலட்சம் செலவில், 224 குடியிருப்புகள் கட்டப்படவிருக்கின்றன; ஏறத்தாழ ஆயிரம் பேர் இதனல் வசதி பெற இயலும்.

"புதிய குடியிருப்புகளை, குடிசை மாற்று வாரியம் ஒன்பதே மாதங்களில் அமைத்துத தந்துவிடுவோம்" என்று உறுதி கூறிய வாரியத் தலைவருக்கும் -- அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் கருணநிதி அவர்கள் -- இதற்கான அடிக்கல் நாட்டு விழாவின்போது -- பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம். எல்.ஏ., அனைவரையும் வரவேற்ருர்.

முதலமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"குடிசை மாற்றுத் திட்டம் என்பது தமிழக அரசின் திட்டம்—இந்த வாரியத்தின் திட்டம்; ஆனல் இதுவரையில், குடிசைப் பகுதிகளை மாற்றுவதில் மத்திய அரசாகட்டும் -- எங்களுக்கு முன்பு இங்கே ஆண்டிருந்தவர்களாகட்டும் -- 'குடிசை அபிவிருத்தித் திட்டம்' என்றுதான் செயல்பட்டு வந்தார்கள்.

குடிசைப் பகுதிகளை முன்னேற்றுவது என்பதால் உரிய பயன் கிடைக்காது என்று கருதி, 'குடிசைப் பகுதிகளை மாற்றியே தீர வேண்டும்' என்ற முடிவுக்கு வந்து—அதற்கெனத் தனியானதோர் வாரியத்தை அமைத்து—அதன்படி சிறப்பாகக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

ஏதோ, 'கட்டடத்தைக் கட்டித் தந்தோம்' என்றில்லாமல், நல்ல தண்ணீர் வசதி—தூய காற்றோட்ட வசதி — குழந்தைகள் விளையாடக் காற்றோட்டமுள்ள பகுதிகள்—ஆடு மாடுகளை ஒரு புறத்தில் கட்டிவைத்து வளக்கத்தக்க விதத்தில் 15 மாடுகள் வரை கட்டப்படுவதற்கேற்ற தொழுவம் போன்றவை இத்திட்டத்தில் இணைந்திருப்பது சாலச் சிறந்தது—போற்றத்தகுந்தது—புகழுதற்குரியதாகும்.

'சென்னை நகரத்தில் ஏழாண்டுக் காலத்திற்குள் குடிசைகளே இல்லாத புதுமையைச் செய்தாக வேண்டும்' என்று கருதி வெகு வேகமாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

'சென்னையில்மட்டும் இதுபோன்ற காரியங்களைச் செய்தால் போதுமா -- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற துன்பத்திற்கு ஆளாகியிருக்கிற பகுதிகளுக்கு நன்மை செய்திட வேண்டாமா' என்ற கேள்வி எழாமலில்லை; கேள்விக்கு விடை காணும் பணியிலும் ஈடுபட்டு வருகிறோம்.

தஞ்சையிலும் வேறு சில மாவட்டத்திலும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள், ஆங்காங்குள்ள நிலக்கிழார்களுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருந்து வருகிருர்கள்; அப்படிப்பட்ட நிலம், விவசாயத் தொழிலாளர்களுக்குச் சொந்தமானதல்ல; அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்குக் கடன் பெற விரும்பினல், வீட்டை வங்கிகளிடம் அடமானம் வைக்கும் உரிமை இல்லை.

இப்படிப்பட்ட விவசாயிகள் வீடுகளைக் கட்டிக் கொள்வதோடு—அந்த நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவும் வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

முதல் கட்டமாக அப்படிப்பட்ட இடங்களை எடுத்து வீடு கட்டித் தரும் பணி நிறைவேற்றப்படுவதை அறிந்து—மகிழ்ந்து—சில நல்ல உள்ளம்படைத்த நிலக்கிழார்கள், 100-க்கு மேற்பட்ட பட்டாக்களை அவர்களே முன்வந்து அரசாங்கத்திடம் நட்டஈடு பெருமலே தருவதற்கு முன்வந்திருக்கிருர்கள்.

அப்படி நல்ல உள்ளத்தைக் காட்டினலும் காட்டாவிட்டாலும் அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து அந்தக் காரியத்தை நிறைவேற்றியே தீரும்.

சிலர், 'சென்னை மக்களுக்கே எல்லாம் செய்கிருர்கள்; என்று கிராமங்களுக்குச் சென்று பேசுகிருர்கள்.

அதே ஆட்கள் நகர்ப்புறங்களுக்கு வந்து 'பார் பார் -- கிராமங்களுக்கே செய்கிருர்கள்—பார்த்தீர்களா' என்கிருர்கள்.

அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்—'சென்னையில் பேசினல் கிராமங்களுக்குத் தெரியாது; கிராமத்தில் பேசினல் சென்னைக்குத் தெரியாது' என்று.

ஆனல் சென்னையில் இருப்பவர்கள், இங்கேயே உதயமானவர்களல்லர்; 'மீனம்பாள் சிவராஜ் நகரில் குடியிருப்பவர்களில் எத்தனைப்பேர் வெளியூர்க்காரர்கள்' என்கின்ற கணக்குத் தெரியும்.

பல்வேறு குப்பங்கள்—நகரங்கள் எப்படி உருவாகின்றன; கிராம மக்கள் சென்னையை நோக்கி வருவார்கள் -- சாலையில் நடமாடுவார்கள் -- ஊர் பழகிவிடும் -- குடிசைகள் இருப்பது தெரியும்; 'இவைகளெல்லாம் எப்படி வந்தன' என்ற கேள்வி எழும்; குடிசைகளைக் கட்டி வாடகைக்கு விடும் பணக்காரர்கள், 'குடிசைகளைக் கட்டிக் கொள்' என்று இவர்களுக்குத் தைரிய மூட்டுவார்கள்.

'இப்படிக் குடிசை அமைத்தால் அகற்றிவிட மாட்டார்களா' என்ற கேள்வியும் எழும்.

'நடக்கின்ற ஆட்சி யாருடையது' என்று பார்ப்பார்கள்; 'காமராசருடைய ஆட்சியா — காமராசர் நகர்' என்று பெயரிடுவார்கள்; 'கருணநிதி ஆட்சியா—கருணநிதி நகர்' என்று பெயரிடுவார்கள்; இப்படியெல்லாம் தந்திரம் கற்றவர்கள்தான் அவர்கள்; இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாக குடிசைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன."

'ரகிமானை விடுதலை செய்க'

இலங்கையிலிருந்தும் கோரிக்கை

கொழும்பு, அக். 8—

முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரி, இலங்கையில் 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

ரகிமானை விடுதலை செய்து வங்க தேசப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறும் அவர்கள் பாகிஸ்தானைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இக்கோரிக்கையில் மேலும் பல உறுப்பினர்கள் கையெழுத்திடுவர் என்றும் தெரியவருகிறது.

தமிழக மின்வாரிய ஊழியர்களுக்கு 5 சதவிகித போனசு

நிதி நிலை சரியில்லாதிருந்தும் தாராள மனத்துடன் முதல்வர் அறிவிப்பு

நகர ஈட்டுப் படி-தற்காலிகத் தொழிலாளர்கட்கு ஊதிய உயர்வு கிடைக்கிறது

சென்னை அக். 9

தமிழ்நாடு மின்வாரியத்தைச் சேர்ந்த சுமார் 80 000 ஊழியர்களுக்குப் போனசு வழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு அனுமதித்திருக்கிறது.

1970—71-ம் ஆண்டுக்கு இவர்களின் ஊதியத்தில் 5 சதவிகிதம் போனசு வழங்க ரூ. 81 இலட்சம் செலவாகும்.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுடன் நிர்வாகத்தினர் பிரதிநிதிகளும் -- தொழிலாளர் பிரதிநிதிகளும் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு இம்முடிவு எடுக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையின்போது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என்.வி. நடராசன், மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன், மின்வாரியத் தலைவர் ஆகியோரும் உடனிருந்தனர்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு, முதல்வர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது:—

"முக்கியப் பிரச்சினைகளில் 1970—71-ம் ஆண்டுக்குரிய போனசும் ஒன்று; தற்போதைய போனசு சட்டப்படி -- மின்சார வாரியத்துக்கு இலாபம் இல்லாததால் 4 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்றிருந்தபோதிலும், தொழிலாளர்கள் நன்மையைக் கருதி 5 சதவிகிதமாக உயர்த்தி, ரூ. 81 இலட்சம் அளவில் இவ்வாண்டுக்குப் போனசு தருவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது; இதன்மூலம் ரூ. 16 இலட்சம் அதிகப்படி செலவாகும்.

31,000 தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 25 காசுகள் வீதம் 1—6—71 முதல் கூலி உயர்வு கொடுக்கப்படும்.

நகர ஈட்டுப் படி

தமிழக அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி வழங்கப்படும் முறையில், மின்சார ஊழியர்களுக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நகர ஈட்டுப் படியைக் கணக்கிடும்போது, அகவிலைப் படியில் பாதித் தொகையையும் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக் கணக்கிடப்படும்.

இச்சலுகை, 1—6—71 முதல் கொடுக்கப்படும்.

1—8—71 முதல் மலைவாழ்வுப் படியைச் சம்பளத்தில் 10 சதவிகிதமாக உயர்த்தப்படும்; இதைக் கணக்கிடும்போது, அடிப்படைச் சம்பளத்துடன் பாதி அகவிலைப் படியையும் சேர்த்துக்கொள்ளப்படும்.

மின்வாரியத் தொழிலாளர்களின் பயணப் படியும் -- நாள் படியும் 7—10—71 முதல் உயர்த்தப்படும்.

தண்டலர்கள் (பில் கலெக்டர்கள்) ஸ்டோர் கீப்பர்கள் சம்பந்தமாகத் தனிப் பிரிவு (கிரேடு) ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மேற்கூறிய சலுகைகளை கொடுக்கும் வகையில் மின்வாரியத்துக்கு ஆண்டுக்கு ரூ 86 இலட்சம் அதிகமாகச் செலவாகும்.

"மின்வாரியத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை என்ற போதிலும், தொழிலாளரை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக இச்சலுகைகள் கொடுக்கப்படுகின்றன; இதைத் தொழிலாளர்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்."



நெல்-அரிசி நடமாட்டம்

கட்டுப்பாடு ரத்து ஆணை

சென்னை, அக் 8—

தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை மாவட்டங்கள் சம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட நெல் -- அரிசி நடமாட்டக் கட்டுப்பாட்டு உக்தரவும், நெல் அரிசி வியாபாரிகள் (லைசென்சு ஒழுங்கு முறை -- இருப்பு விற்பனை) உத்தரவும், அக். 5-லிருந்து ரத்து செய்யப்பட்டன.

முதலமைச்சர் அறிவிப்பைத் தொடர்ந்து இவ்விரு உத்தரவுகளையும் அரசு ரத்து செய்தது.

அறிஞர் அண்ணா

பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

11--10--71

திருப்போரூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு கடை வீதியில்; தலைவர் : ஆ. அகத்தீசுவரன்; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சி. சிட்டிபாபு எம்.பி., முனு ஆதி எம்.எல்.ஏ., செ. எ. பலராமன், மெ. வீரபத்திரன், கே. பரசுராமன், வ பசுபதி, தி. மு. கந்தசாமி, சி. பார்த்தசாரதி, இராமச்சந்திரன், மற்றும் பலர்.

சிட்லபாக்கம்

தி. மு. க. சார்பில் 7 மணிக்கு அண்ணா தெருவில்; தலைவர் : பி. இராசன்; பேசுவோர் : அமைச்சர் எஸ் ஜே. சாதிக் பாட்சா, திரு. தி. சு. இலட்சுமணன் எம.பி., இரா. மோகனரங்கம், பம்மல் நல்லதம்பி, ஆலந்தூர் எஸ். பாலன் எம்.சி., எல்ல. இராசமாணிக்கம், ஆபிரகாம், வி. கன்னியப்பன், த. சக்ரபாணி மற்றும் பலர்.

நெய்வேலி வேலைநிறுத்தம் முடிவு

முதல்வர் உறுதிமொழியின் பேரில் வேலைக்குத் திரும்பினர்

'குறைகளை எடுத்துக்காட்டவே வேலைநிறுத்தம்' என எஸ். டி. சோமசுந்தரம் விளக்கம்

நெய்வேலி, அக் 9-

கடந்த 6 நாட்களாக நடைபெற்றுவந்த நெய்வேலி இளம் பொறியர்கள் – மற்றும், தொழில் நுணுக்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது.

நேற்று, சென்னையில் இவர்களின் சங்கப் பிரதிநிதிகள் முதலமைச்சருடனும் – தொழிலாளர் நலத்துறை அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்; 'நியாயமான கோரிக்கைகளை நெய்வேலி நிர்வாகம் விரைவில் பரிசீலனை செய்து ஆவன செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்' என்று முதலமைச்சர் கூறிய உறுதிமொழியை ஏற்று வேலைநிறுத்தத்தைக் கைவிட தொழிலாளர் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டனர்.

வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெறும் முடிவை நெய்வேலியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அறிவித்த சங்கக் காப்பாளர் எஸ். டி. சோமசுந்தரம் எம் பி., தங்களது குறைகளை எடுத்துக்காட்டுவதற்காகவே இளம் பொறியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதாகவும், இவ்வேலைநிறுத்தம் யாருக்கும் எதிரானதாக அல்ல என்றும் விளக்கம் அளித்தார்.

மா சே-துங்குடன் எதியோப்பிய மன்னர்

105 நிமிட நேரம் உரையாடினராம்

உடல் நலத்துடனேயே இருப்பதாகத் தகவல்

பீகிங், அக். 9—

சீனத் தலைவர் மா சே -- துங்கை, நேற்று, எதியோப்பிய அரசர் ஹெய்லி செலாசி சந்தித்துப் பேசினர்.

மா சே -- துங் உடல் நலத்துடன் இருப்பதாகவும், இரு தலைவர்களும் சுமார் 105 நிமிட நேரம் உரையாடிக்கொணடிருந்ததாகவும், அரசரின் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இதற்குமுன், மா சே -- துங் கடைசியாகக் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி, கடந்த ஆக. 7-ம் நாள் பர்மியத் தலைமையமைச்சரை வரவேற்றதுதான்.

மா சே -- துங்குடன் துணைத் தலைவர் லின் பியோ இருந்தாரா என்பதை, அரசரின் குழுவினரால் கூற முடியவில்லை; ஆயினும், சீனத் தலைமையமைச்சர் சூ-என்-லாய் உட்பட ஏராளமான அதிகாரிகள் இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

பேரரசர் ஹெய்லி செலாசிக்கு 79 வயதாகிறது; மா சே -- துங்கைவிட ஒரு வயது அதிகம்.

1970 ஆகஸ்டிலிருந்து மா சே -- துங் சாதிக்கும் 7-வது உலகத் தலைவராவார் -- பேரரசர் ஹெய்லி செலாசி!

பம்பாய் தி. மு. க.

தோழர்கட்கு :

"பம்பாய் மான்கூர்டு எம்.ஜி ஆர். மன்றத் திறப்பு விழாவும் -- மான்கூர்டு திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 63-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவும் 16—10—71 மாலை 6 மணியளவில், மான்கூர்டு சனதா காலனியில் நடைபெறும்.

"தாயகத்திலிருந்து வருகை தருகின்ற திரு. எம். செல்வராசு எம் எல்.ஏ. அவர்களை சயான் டிராம்பே நெடுஞ்சாலை சனதா காலனி பேருந்து நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலத்துடன் அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அனைவரும் பெருவாரியாக கலந்துகொண்டு விழாவினையும் ஊர்வலத்தையும் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்" என பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

தமிழ்நாட்டு நாளிதழ்களை தருவிக்கத் தடை

அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும் நடவடிக்கையாம்

ஆங்கில இதழ்களுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை -- இலங்கை அரசின் விபரீதப் போக்கு

கொழும்பு, அக். 9—

'தினத்தந்தி' -- 'மாலை முரசு' -- 'தினமணி' ஆகிய பத்திரிகைகளின் இறக்குமதியை உடனடியாகத் தடைசெய்து இலங்கை அரசு உத்தரவிட்டிருக்கிறது.

வார -- மாத இதழ்களை பொறுத்த வரையில், சில பத்திரிகைகளுக்கு மட்டுமே இனிமேல் அனுமதி வழங்கப்படும் என்றும் இலங்கை அறிவித்துள்ளது; இவைகள்கூட, குறைந்த எண்ணிக்கையிலேயே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுமாம்.

வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்துவது மட்டுமன்றி, இலங்கைப் பத்திரிகைகளுக்கு ஊக்கம் தருவதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சமாதானம் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசின் இந்நடவடிக்கை, 'ஒருதலைப்பட்சமானது' என்று பலரும் கருதுகின்றனர்; ஏனெனில், ஏனைய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு இக்கட்டுப்பாடு விதிக்கப்படாததுடன், அவை பெரும் அளவில் இலங்கையில் வரவழைக்கப்படுகின்றன.

நிலைமை குறித்து இந்தியத் தூதரகத்திடம முறையிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அமைச்சர் குமார சூரியர் என்பவரின் பரிந்துரைக்கேற்ப, அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது; அமைச்சரவையிலிருக்கும் ஒரே தமிழர் இவர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

இரயில்வே போர்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் அமைச்சரவையில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், ஒரு தனி அமைச்சரால் தம்மைப் பதவி நீக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

"உலக இரயில் அமைப்புத் துறையில் நான் மிகுந்த திறமை பெற்றிருப்பதால், இப்போது கிடைப்பதைவிட அதிக ஊதியத்தில் வேலை கிடைப்பது எனக்கு ஒன்றும் சிரமமானதல்ல" என்ருர் அவர்; 'ஆயினும் என்னுடைய தன்மானம் காக்கப்பட வேண்டுமென்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்; அதற்காகவே இறுதி வரையில் பாடுபடப் போகிறேன்' என்றும் அவர் தெரிவித்தார்.

சிம்லாவில் நடைபெறும் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருக்கும் அமைச்சர் அனுமந்தையாவிடம் இது குறித்துக் கேட்டதற்கு, 'இதெல்லாம் நிர்வாகப் பிரச்சினை; இதனைப் பொது மேடைப் பிரச்சினையாக்க வேண்டியதில்லை' என்று பதிலளித்தார்.

செம்பாக்கம்

ஊராட்சி மன்றக் கட்டடத் திறப்பு விழா

செம்பாக்கம் ஊராட்சிமன்றக் கட்டடத் திறப்பு விழா, 11–10–71 மாலை 5-மணிக்கு திரு. அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்; கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கட்டடத்தைத் திறந்துவைப்பார்; சி. சிட்டிபாபு எம்.பி. அண்ணா படத்தையும், முனு. ஆதி எம்.எல்.ஏ. திருவள்ளுவா படத்தையும் திறந்துவைப்பார்கள்; செ. ஏ. பலராமன், பி. வீரபத்திரன், பசுபதி, கே. பரசுராமன், மற்றும் பலர் பேசுவர்.

இசை - நாடக சங்கம்

சென்னை, அக். 9—

தமிழ்நாடு இசை -- நாடகச் சங்கத்தின் தலைவராக நீதிபதி பி ஆர். கோகுலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

சங்கத்தின் நிர்வாகக் குழுவில் முரசொலி மாறன் எம்.பி., இரா. செழியன் எம்.பி. ஆகியோர் நியமன உறுப்பினர்களாகியுள்ளனர்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, சலகண்டபுரம் கண்ணன் ஆகிய இருவரின் இடங்களில் இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.